MEDIA RELATIONS UNIT
International Committee of the Red Cross
19, avenue de la Paix
1202 Geneva
Switzerland
Phone: +41 22 730 3443
Fax: +41 22 734 8280
press.gva@icrc.org
http://www.icrc.org

ICRC

**ஐசிஆர்சி செய்தி வெளியீடு இல. 09/18**

9 யூலை 2009

# இலங்கை: ஐசிஆர்சி தனது பணி நடவடிக்கைகளை குறைத்துக் கொள்ளவுள்ளது

கொழும்பு/ ஜெனீவா (ஐசிஆர்சி ) - இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ( எல்ரீரீஈ) இடம்பெற்ற தீவிர மோதல் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, இந் நாட்டில் அதன் பணிகளை குறைத்துக் கொள்ளும்படி செஞ்சிலுவை சர்வதேசக் குழுவை (ஐசிஆர்சி) இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

1989 முதல், இலங்கையில் ஐசிஆர்சி நிரந்தர பிரசன்னமாகி இருந்துள்ளது. மாறி வரும் தேவைகளுக்கேற்ப கடந்த பல வருட காலங்களாக ஐசிஆர்சி யின் பங்களிப்பு இந்நாட்டில் இருந்து வந்துள்ளது. 1980 களின் இறுதிப் பகுதியில் நாட்டின் தென் பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சி தொடர்பில் உண்டான தேவைகளில் அது தனது முதற் பணியை மேற்கொண்டது. அதன் பின்னர் இவ்வருட முதற் பகுதி வரை, அரசாங்க படைகளுக்கும் எல்ரீரீஈ க்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள் தொடர்பில் ஏற்பட்ட மனிதாபிமான தேவைகளில் அது தனது பணிகளை மேற்கொண்டது.

இலங்கையில் அதன் அமைவு மற்றும் அதன் முதன்மைப் பணிகள் பற்றிய மீள்பரிசீலனையை தற்போது ஐசிஆர்சி நடாத்திக் கொண்டிருக்கிறது. அதன் முதற் கட்டமாக, கிழக்கு மாகாணத்தில் தனது பணிகளை முடிவுக்குக் கொண்டுவந்து பணியகங்களை மூடிக்கொள்வதுடன் அதன் வெளிநாட்டு ஊழியர்களையும் அங்கிருந்து மீளப் பெற்றுக் கொள்கிறது. இருப்பினும், மனிதாபிமான நிலைவரங்கள் தொடர்பில் ஐசிஆர்சி தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடாத்திக் கொண்டிருக்கும் என தெற்காசிய நாடுகளுக்கான ஐசிஆர்சி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஜாக் டி மாய்ஓ தெரிவித்தார்.

ஐசிஆர்சிகுள்ள ஆணையதிகாரத்துக்கு அமைய, இடம்பெயர்ந்தோர் மற்றும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியோர் உட்பட அண்மைய மோதற் சூழ்நிலைகளால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டவர்களின் மனிதாபிமான தேவைகளில் உதவிட அர்ப்பணிப்புடன் உள்ளதாக அது மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

**For more information, please contact:**
**Sarasi Wijeratne, ICRC Colombo, tel: +94 11 250 33 46 or +94 77 315 88 44**
**Simon Schorno, ICRC Geneva, tel: +41 79 251 9302**
**or visit our website: www.icrc.org**